# சங்க இலக்கியத்தில் பரத்தையர் - உள்ளப் போராட்டம்

**முனைவர் இரா.அம்சராஜ்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோவை

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

ஓர் இனக் குழுவில் இருந்து மற்றோர் இனக்குழுவிற்குப் போரிடச் செல்லும் ஆண்கள் அக்குழுவில் உள்ள ஆண்களை வென்று, தோற்றுப்போன இனக்குழுவில் உள்ள பொருட்களை மட்டுமல்லாமல் அங்குள்ள பெண்களையும் அடிமைகளாகக் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்ட பெண்கள் தனியாகத் தங்க வைக்கப்பட்டனர். பின் அங்குள்ள ஆண்கள் அப்பெண்களோடு பாலின்பம் கண்டனர். இப்பெண்களே காலப்போக்கில் ‘பரத்தையர்’ என்றப் பொதுச்சொல்லால் அழைக்கப்பட்டனர்.

‘உள்ளப்போரட்டம்’ என்பதில் உள்ள ‘உள்ளம்’ காதல் சார்ந்தது. போராட்டம் (Conflict) என்பது உணர்வு நிறைவேறாத தருணத்தில் உள்ளத்திலேயே எழுவதாகும். மனக்கிளர்ச்சியால் உணர்வுகள் எழுகின்றன. இவ்வுணர்களுள் பால் உணர்ச்சி தலையாயதாகும். இந்த உணர்ச்சி திருப்தி அடைவதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படாவிட்டால் அல்லது தடைகள் ஏற்பட்டாலோ கிளர்ச்சியானது போராட்டமாக உருவெடுக்கின்றது. இதுவே உணர்வுப்போராட்டம் (அ) உள்ளப்போராட்டம் என்றழைக்கப்படுகின்றது. இதனடிப்படையில் பழந்தமிழ் இலக்கியத்தில் பொதிந்துள்ள பரத்தையரின் உளவெளிப்பாட்டினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

“உளப்போரட்டம் என்பது ∴பிராய்டியத்தின் அடிப்படைக் கருத்தாக்கங்களில் ஒன்றாகும். உள்ளத்தில் பல போராட்டங்கள் நிகழ்ந்தாலும் பாலுணர்ச்சிக்கு எதிரான போராட்டமே முதன்மையாகக் கருதப்படுகிறது. அனைத்துப் போராட்டங்களைப் போல் பாலியல் போராட்டத்திற்கும் முரண்பாடு காரணியாகிறது.”[1] இரண்டு பிரிவுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் போராட்டத்தை ஏற்படுத்துகின்றன. ∴பிராய்டியத்தின் படி பாலுணர்ச்சிக்கு முரண்பட்ட பண்பாட்டு உணர்ச்சி உளப்போரட்டத்தில் பங்கு கொள்கின்றது. இவ்விரு உணர்ச்சிகள் இயல்பிலேயே முரண்பட்டிருப்பதால் ஒற்றுமைக்கு வாய்ப்பின்றி ஒன்றை மற்றொன்று ஆளுகைக்கு உட்படுத்துவதில் முனைப்பாகச் செயல்படும். இதில் தத்தமது வலிமையைக் காட்டத் தீவிரமாகப் போராடுகின்றன. இவ்விரண்டும் வலிமையானவை என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளப் போராட்டத்தைக் **கர்ட் லீவின்** என்னும் உளவியல் அறிஞர் மூவகைப்படுத்தியுள்ளார்.

1. அணுகுதல் - அணுகுதல் போராட்டம்
2. அணுகுதல் - விலகுதல் போராட்டம்
3. விலகுதல் - விலகுதல் போராட்டம்[2]

**அணுகுதல் - அணுகுதல் போராட்டம்**

விரும்பத் தகுந்த இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாற்றுகளிடையே நிகழலாகும் போட்டியை உள்ளடக்கியதே அணுகுதல் அணுகுதல் போராட்டம் என உளவியல் விளக்குகிறது[3]. விரும்பத் தகுந்த இரண்டு இலக்குகளை ஒரே நேரத்தில் அடைய முயல்வதில் ஏற்படும் உள்ள நிலையே இத்தகைய உள்ளப் போராட்டம் என வரையறை செய்வர்[4]. இரண்டு இலக்குகளும் விரும்பத்தக்கனவாய் உள்ளன. ஒரே நேரத்தில் அவற்றைப் பெற விழையும் போக்கினால் போராட்டம் தோன்றுகிறது.

தலைவன் இல்லாத ஊரில் தானும் வாழ முடியாது என்று பரத்தைக் கூறுவதின் வாயிலாக அணுகுதல் அணுகுதல் போராட்டம் ஏற்பட்டுள்ளது. இதனை,

**"கண்ணுறு விழுமம் கைபோல் உதவி**
**நம்உறு துயரம் களையார் ஆயினும்**
**இன்னாது அன்றே அவர்இல் ஊரே"[5]**

தலைவனைக் காணுகின்ற எல்லையிலே தான் வாழ்ந்தாலும் எனக்கு இனிமையாக இருக்கிறது. கண்ணிலே விழுகின்ற சிறு தூசியை கை உடனே சென்று நீக்குவது போல, எனக்கு ஏற்படும் துன்பத்தை அவர் உடனே வந்து நீக்க மாட்டாராயினும், அவர் இல்லாத ஊரில் யான் இருந்தால் துன்பம் தான் மேலோங்கும் என்று கூறுகிறாள். மேலும், தலைவனை அன்றி மற்றோர் எனக்கு யாரும் இல்லை என்கிறாள். இப்பாடலில்,

தலைவன் இல்லாத ஊரில் தன்னாலும் வாழ முடியாது என்பதிலிருந்து தான் அவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிற விருப்ப உணர்வே அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டமாக வெளிப்படுவதை உய்த்துணரமுடிகிறது.

தலைவி, பரத்தையால் தலைவனைக் கவரமுடியாதெனப் பழித்தாள். அதனைக் கேள்விப்பட்ட பரத்தை,

**"வண்டுறை நயவரும் வளமலர்ப் பொய்கைத்**
**தண்துறை ஊரனை எவ்வை எம்வயின்**
**வருதல் வேண்டுதும் என்பது**
**ஒல்லேம் போல்யாம் அதுவேண் டுதுமே"[6]**

தலைவனின் ஊரில் உள்ள துறை குளிர்ச்சியானது. மலர்வளம் நிரம்பியது. வண்டுகள் தங்குவது. யாவரும் விரும்புவது. அவனை நாங்கள் எங்களிடமே வர விரும்புகின்றோம் என்று பரத்தை கூறுவதோடு, எம் தங்கையாகிய தலைவி சொல்கிறாளாம். அதனை வெளியே விரும்பாதவர்கள் போலக் காட்டி உள்ளே அதனையே விரும்புகிறோம் என்று கூறுவதிலிருந்து தலைவனை தன்னுடன் இருக்க வேண்டும் என்ற அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டமாக வெளிப்படுவதை உணரலாகிறது.

பரத்தை தலைமகனைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டாள் எனத் தலைவி இடித்துரைத்தாள். இது கேட்ட பரத்தை,

**"ஆதி மந்தி பேதுற்று இனைய**
**சிறைபறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்**
**அம்தண் காவிரி போலக்**
**கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே!"[7]**

வீரக்கழலும் கச்சும் அணிந்த அழகனாகிய சேர இளவரசன் ஆட்டனத்தியைக் கடலில் சென்றுசேரும் காவிரி கையகப்படுத்திக் கொண்டபோது, காதலியாகிய சோழ இளவரசி ஆதிமந்தி மிகவும் வருந்தி ஆட்டனத்தியைக் காணீரோ என அலறினாள். இது போலத் தலைவி அலறுமாறு தலைவனைக் கையகப்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்று கூறுகிறாள். தலைவனை எப்படியாவது தன்னிடம் இருத்திக் கொள்ள வேண்டும் என்கிற அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டத்தை இப்பாடல் வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது. மேலும், தலைவன் தலைவியோடு புனலாடினான் என்ற செய்தியைக் கேட்ட பரத்தை,

**"அம்ம வாழியோ மகிழ்நநின் மொழிவல்**
**பேரூர் அலர்எழ நீரலைக் கலங்கி**
**நின்னொடு தன் புனல் ஆடுதும்**
**எம்மொடு சென்மோ செல்லல்நின் மனையே"[8]**

தலைவனே உனக்கு ஒன்று சொல்லுகிறேன் கேட்பாயாக!. இந்தப் பெரிய ஊரில் உள்ள எல்லாரும் அலர் தூற்றட்டும். நீரலைகள் மோதி நம்மைச் சுழற்றட்டும். குளிர்ந்த புனலில் நீராடுவோம் என்னோடு வருக. உன் வீட்டிற்கு செல்ல வேண்டாம் என்று கூறுகிறாள். இங்ஙனம் பரத்தைக்கு தலைவன் தன்னுடன் மட்டும் புனல் விளையாட்டினை விளையாட வேண்டும் என்ற மன விருப்பமானது இங்கு அணுகுதல் - அணுகுதல் போராட்டமாக ஏற்பட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும், புனலாட அழைத்த தலைவனை நோக்கி பரத்தை பின்வருமாறு கூறுகிறாள். இதனை,

**"கதிரிலை நெடுவேல் கடுமாண் கிள்ளி**
**மதில்கொல் யானையின் கதழ்புநெறி வந்த**
**சிறையழி புதுப்புனல் ஆடுகம்**
**எம்மொடு கொண்மோளம் தோள்புரை புனையே"[9]**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல், கிள்ளி என்னும் சோழன் விரைந்து செல்லும் குதிரையை உடையவன். அவன் கையிலுள்ள நீண்ட வேல் கதிர் வீசும். மதில் போரின் போது கிள்ளியினுடைய யானை அரண்களை அழித்து இடையில் உள்ள பொருட்களை வாரிக் கொண்டு, நிறைவாகக் கோட்டைக்குள் நுழையும். அது போல, அணையை உடைத்தும், இடையில் உள்ள பொருட்களை வாரிக்கொண்டும், ஆற்றில் புகும் புது வெள்ளத்தில் படிந்து விளையாடுவோம். தலைவனே! என்னொடு வருக!. என் தோள்களைத் தெப்பமாகப் பற்றிக் கொள்க! என்று கூறுவதிலிருந்து தலைவனோடு தான் சேர்ந்து புனலாட வேண்டும் என்னும் விருப்பவுணர்வு பரத்தைக்கு அணுகுதல் - அணுகுதல் போராட்டமாக வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

**அணுகுதல் - விலகுதல் போராட்டம்**

ஓர் இலக்கினை அணுகவும், விலகவும் தூண்டும் வலிவான போக்குகள் ஒரே நேரத்தில் நிலவுவதே அணுகுதல் - அணுகுதல் போராட்டம் எனப்படும்[10]. ஓர் இலக்கினை அடைவதில் நேர் நிலையான தூண்டல் ஒன்றும், எதிர்மறையான தூண்டல் ஒன்றும் செயல்படுகின்றன. அப்போது அந்த இலக்கினை அணுகுவதா? விலகுவதா? என்னும் போராட்டம் தோன்றுகிறது.

பரத்தையை விடுத்து சென்ற தலைவன் மீண்டும் வருகிறான். அவன் வருதைக் கண்ட பரத்தையின் உள்மனம் அணுகுகிறது. ஆனால், தன் தாய் அவனைக் கண்டால் தலைவனிடம் நெருங்க விடமாட்டாள் அதனால் தலைவனை இங்கு வரவேண்டாம் என்று விலகுகிறாள். இதனை,

**"என்னலும் பரியலோ இலம்எனத் தண்நடைக்**
**கலிமா கடை, வந்துஎம் சேரித்**
**தாருங் கண்ணியுங் காட்டி ஒருமைய**
**நெஞ்சம் கொண்டமை விடுமோ வஞ்சக்**
**கண்ணுடைச் சிறுகோல் பற்றிக்**
**கதம்பெரிது உடையாள்யாய் அழுங்கலோ இலளே"[11]**

தலைவன் தன்னைக்காண வருவதைக்கண்ட பரத்தை, 'களிறுகள் பல தம் சேனையில் கொண்டு வீரமுடையத் தலைவன், தன்னிடம் பகைமை கொண்ட மன்னர்களின் கோட்டையை வென்ற தலைவனின் பாதத்தில் வீழ்ந்து வணங்குவர். அத்தகு நாட்டில் வாழுகின்ற தலைவன் என்னை அடைய வேண்டி விரைந்து ஓடும் குதிரை மீது ஏறி நான் தங்கியிருக்கும் சேரிக்கு வந்து தன்னுடைய மார்பில் சூடிய மாலையும், தலையில் சூட்டியிருக்கிற பூவையும் என்னிடம் காட்டி என் நெஞ்சத்தை வஞ்சமாகக் கொண்டு விடுத்துச் சென்ற தலைவனை மறந்து விடுவேனோ? என்று கூறுகிறாள். ஆனால், பரத்தை என் அன்னை நம்பிக்கைத் துரோகம் இழைத்த தலைவனை, நெருங்கிய கணுக்களை உடைய மூங்கிற் கம்பால் அடிக்காமல் விடமாட்டாள்! அதனால் நீ இங்கு வராதே என்பதிலிருந்து தன் தாயால் தலைவன் தண்டிக்கப்படக் கூடாது என்ற காரணத்தினால் பரத்தையிடம் அணுகுதல் - விலகுதல் போராட்டம் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

மகன் கூறிய செய்தியைத் தலைவியின் தோழியர் தலைவனிடம் வந்து சொல்லத் தலைவன் கேட்டுக் கொண்டான். அதனால் ஊடல் கொண்ட பரத்தை,

**"நீள்வயல் நண்ணி இமிழும் ஊர**
**எம்இவண் நல்குதல் அரிது**
**நும்மனை மடந்தையொடு தலைப்பெய் தீமே"[12]**

புதல்வனை தழுவி மெய்யின்பமும், மழலைதனைக் கேட்டுச்செவியின்பமும், நடைதனைக்கண்டு காட்சியின்பமும் தலைவன் பெறுவான். ஆதலால், பரத்தையாகிய எனக்கு, இங்கே தங்கி இன்பம் தரமாட்டான் என்கிறாள் பரத்தை. தலைவன் தன்னுடன் இருக்கவேண்டும் என்ற எண்ணம் பரத்தைக்கு இருந்தாலும் அவன் தனக்கு முழுமையாக இன்பம் தரமாட்டான் என்று கூறுவதிலிருந்து, பரத்தைக்கு அணுகுதல் - விலகுதல் போராட்டம் ஏற்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**விலகுதல் - விலகுதல் போராட்டம்**
(Avoidance – Avoidance conflict)

இரண்டு விரும்பத்தகாத இலக்குகளில் ஏதாவது ஒன்றை அடைந்தே ஆக வேண்டிய நிலையை விலகுதல் - விலகுதல் உள்ளப் போராட்டம் என்பர்.[13] இத்தகைய போராட்டத்திற்கு ஆட்பட்டவன் பூதத்திற்கும் பெருங்கடலுக்கும் இடையே அகப்பட்டவன் போல இரு தீமைகளுக்கு இடையே குறைவான தீமையைத் தேர்ந்தெடுத்தாக வேண்டிய நிலையில் உள்ளான்.[14]

தலைவன் பரத்தையர் சேரியில் தங்கிப் பிறகு தனக்குரிய காமக்கிழத்தியிடம் சென்றான். அப்போது அவனோடு ஊடி, தனது மிகுதியான காதலை வெளிப்படுத்துகிறாள். அதைக் கண்டு, தலைவன் அவளை நெருங்கி அமைதிப்படுத்தினான். அவள் ஊடல் தீர்ந்து பின்வருமாறு கூறுகிறாள். இதனை,

**"தெள்அரிச் சிலம்பு ஆர்ப்பத் தெருவின்கண் தாக்கநின்**
**உள்ளம்கொண்டு ஒழித்தாளைக் குறைகூறிக் கொளநின்றாய்**
**துணிந்தது பிறிதாகத் துணிவுஇலள் இவள்எனப்**
**பணிந்தாய்போல் வந்துஈண்டுப் பயன்இல் மொழிவாயோ?"[15]**

என்னும் கலித்தொகை பாடலில், காமக்கிழத்தி தெருவில் சிலம்பு ஒலிக்க நடந்து வந்து, தனது கண் பார்வையால் உன்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு கைவிட்டவளை, மற்றொரு முறை சந்தித்து உன் எண்ணத்தைக் கூறி அவளது காதலைப் பெற எண்ணியிருக்கிறாய்! இவ்வாறு உன் எண்ணம் வேறாக இருக்கவும், பணிவுடையவன் போல் இங்கு வந்து என்னை, 'இவள் அறிவில்லாதவள்' என்று நினைத்துப் பயன்இல்லாத சொற்களைச் சொல்ல வேண்டாம் என்கிறாள். தலைவனின் மனதைக் கவர்ந்த பெண்ணிடம் மீண்டும் அவளை நாடி தன் காதலை வெளிப்படுத்திய தலைவனிடம், இனி தனக்கு தேவையில்லை என்பதன் உள்நோக்கமாக விலகுதல் - விலகுதல் மனப்போராட்டம் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகிறது. மேலும், பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனது வரவு கண்டு ஊடல் கொண்ட காமக்கிழத்தி,

**"தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்**
**யார்? நீ வரும்நாள்போல் அமைகுவம்யாம், புக்கீமோ**
**மாரிக்கு அவாவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு ஆங்கு**
**ஆராத் துவலை அளித்தது போலும் நீ**
**ஓர்யாட்டு ஒருகால் வரவு"[16]**

என்ற கலித்தொகை பாடலில், காமக்கிழத்தி, 'உனது அன்பு நீங்காத புணர்ச்சியைப் பெறும் பரத்தையர்களை இங்கு யாரும் கோபிக்கவில்லை. மழைக்காக ஏங்கிப் புதிதாகப் பிடித்த கதிர் வாடிக்கொண்டிருக்கும் நெற்பயிரில் ஏதோ ஒருமுறை சிறு மழை பெய்து அவ்வாட்டத்தை ஒரு சிறிது போக்கியது போல, ஆண்டுக்கு ஒரு முறை வரும் உன்னுடைய வரவை, எப்பொழுதும் நீ வருவதுபோல் எண்ணிக் கொள்கிறேன். நீ இப்பொழுது அப்பரத்தையரிடமே சென்று வருக!' எனக் கூறுகிறாள். தலைவன் பரத்தையர் பால் சென்று வருகிறான் என்கின்ற நோக்கில் காமக்கிழத்தி தலைவனை வரவேண்டாம் என்னும் விலகுதல் விலகுதல் மனப்போரட்டத்தினால் ஆட்பட்டுள்ளாள் என்பதை அறியமுடிகிறது.

தலைவி தன்மீது பழி கூறியதைக் கேட்ட பரத்தை பொறுக்க இயலாமல் அவளைத் தான் இகழும் கருத்து தோன்ற, தலைவியின் தோழி கேட்குமாறு கூறுகிறாள். இதனை,

**"ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய**
**பெருங்களிற்று எவ்வம் போல**
**வருந்துவர் மாது அவர் சேரியாம் செலினே"[17]**

என்ற பாடலில், தலைவன் ஆகிய ஆதன் எழினி என்பான், 'பகைவரின் மீது தப்பாது எறிகின்ற தன் வேலினை ஒரு யானையின் மார்பில் பாய்ச்சினால் அது எவ்வாறு துன்புறுமோ, அதுபோல அவர்கள் வாழும் சேரியின் பக்கம் செல்லமாட்டேன். என்னைச் சேர்ந்தோரும் அங்கு செல்லமாட்டார்கள் என்று குறிப்பிடுகிறாள். தலைவன் மனைவியும் அவளைச் சேர்ந்தோரும் மனம் போகும் வழியில் எல்லாம் என்னைப் பழிச்சொல் கூறிவிட்ட பிறகு, என்ன நடந்தால் என்ன என்று அதைக் கேட்பதற்கு யாம் அவர்கள் வாழும் பகுதிக்கு சென்றால் வருந்துவார்கள் என உரைக்கிறாள். ஆகையால், தான் அந்தப் பகுதிக்குச் செல்லமாட்டேன் என்னும் கூற்றிலிருந்தே விலகுதல் - விலகுதல் போராட்டத்தினை அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

தலைவனோடு தான் சேர்ந்து வாழ வேண்டும் என்னும் மன உணர்வானது அணுகுதல் - அணுகுதல் மனப்போராட்டமும், தன் தாயால் தலைவன் தண்டிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் பரத்தையிடம் அனுகுதல் - விலகுதல் போராட்டமும், தலைவனின் மனதை கவர்ந்த பெண்ணிடம் மீண்டும் அவளை நாடி தன் காதலை வெளிப்படுத்திய தலைவன் தனக்கு தேவையில்லை என்பதால் விலகுதல் - விலகுதல் போராட்டமும் இடம்பெற்றுள்ளதை உய்த்துணரமுடிகிறது.

**குறிப்புகள்**

1. J.Loplanche and J.B.Pontalls, The Language of Psycho – Analysis , P.360.
2. சிவராஜ், து., சங்க இலக்கியத்தில் உளவியல், ப.17.
3. மேலது, ப.17.
4. மேலது, ப.17.
5. நற்.பா.216:3-5.
6. ஐங்.பா.88.
7. அகம்.பா.76:10-13.
8. ஐங்.பா.77:1-4.
9. ஐங்.பா.78:1-4.
10. சிவராஜ், து., சங்க இலக்கியத்தில் உளவியல், ப.21.
11. நற்.பா.150.
12. ஐங்.பா.86:2-4.
13. சிவராஜ், து., சங்க இலக்கியத்தில் உளவியல், ப.25.
14. மேலது, ப.25.
15. கலி.பா.69:7-10.
16. கலி.பா.71:21-25.
17. அகம்.216:14-16.